Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC .No.75 /2025
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS -7

| | | | |
|---|---|---|---|
| Name: | நேரு | Calling: | கூலி |
| Father's Name: | சஞ்சீவ் | Religion: | |
| Village: | லட்சுமிபுரம் | Age: | 61 |
| Taluk: | நாட்றம்பள்ளி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 19.02.2026 நேரம் : 03.40 PM

( எதிரி ஆஜர் இல்லை, குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது .)

அ.சா.7 முதன்மை விசாரணை.

தேதி, மாதம் நினைவில்லை. சுமார் 10-15 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 03.00-04.00 மணியளவில் நானும் முருகன் என்பவரும் லட்சுமிபுரம் பஸ்ஸ்டாப் இடம் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது நாட்றம்பள்ளி போலிசார் ஒரு நபரை பிடித்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது நாங்கள் இருவரும் பக்கத்தில் இருந்தோம். விசாரித்தபோது அந்த நபர் அவருடைய பெயர் முருகன், வாணியம்பாடி பக்கத்தில் உள்ள ஒரு சிறிய ஊரை சேர்ந்தவர் என்று சொன்னார். கத்தியை காண்பித்து நிறைய நபர்களிடம் பணம், நகை போன்றவற்றை வழிப்பறி செய்வதாக சொன்னார். வாணியம்பாடியில் ஒரு வீட்டில் இருந்து நகை திருடியதாகவும், சூ கம்பெனியில் வேலை செய்வதால் வரும் சம்பளம் பத்தவில்லை என்பதால் இதுப்போன்ற குற்ற செயல்களை செய்வதாகவும் சொன்னார். நாராயணபுரத்தில் நாகலம்மன் கோவில் பூட்டை உடைத்து உண்டியல் , பணம் அதில் உள்ள பொருட்களை திருடி சென்றதாகவும் சொன்னார். மேற்படி

நபரை அன்று ஒரு நாள் மட்டும் தான் பார்த்தேன். அப்போது அவர் தாடி வைத்திருந்தார். தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் கூற இயலுமா என்றால் 10 வருடங்களுக்கு மேல் ஆனதால் சரியாக நினைவிற்கு வருமா என்று தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் எதிரி முருகன் என்கின்ற கானாமுருகனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. அதை நான் போலிசாரிடம் அங்கு வைத்து அன்று போட்டுக்கொடுத்தேன். **மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.த.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

நான் கூறிய விவரங்களை தான் நாட்றம்பள்ளி போலிசாரிடமும் சொன்னேன் என்றால் சரிதான். திம்மாம்பேட்டை காவல் ஆய்வாளரிடம் நான் இந்த வழக்கில் பொருட்கள் கைப்பற்றியதற்கோ, ஒப்புதல் வாக்குமூலத்திலோ கையொப்பம் செய்யவில்லை என்று சொன்னால் என்னிடம் நாட்றம்பள்ளி போலிசார் என்று சொன்னார்கள் நான் கையொப்பம் செய்தேன். திம்மாம்பேட்டை காவல் நிலையத்தார் பதிவு செய்த வழக்கு குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நானும் முருகனும் இதே போன்று நீதிமன்றங்களில் ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ளோம் என்றால் சரிதான். எங்களுக்கு இதே தொழில் என்றாலும் போலிசாரின் கைக்கூலிகள் என்றாலும் சரியல்ல. வழக்கு விவரம் எனக்கு தெரியாது என்றாலும் எதிரியை தெரியாது என்றாலும், திம்மாம்பேட்டை காவல் நிலையத்தாரிடம் நான் எவ்வித கையொப்பம் செய்யவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் காவல் நிலையத்தாரின் கையிருப்பு சாட்சி என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) நேரு

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.02.20 09:52:03 +0530